**திரு மா. இராசாங்கம் :** தலைவர் அவர்களே, கள்ள மார்க்கெட்டு, கள்ளக் கடத்தல் வழக்குகள், பெரும் புள்ளிகள் சம்பந்தப்பட்டவைகளாகவே இருப்பதால், அந்த வழக்குகள் ரகஸ்யமாகவே நடந்து முடிந்து விடுகின்றன. அப்படியில்லாமல், குற்றம் செய்தவர்களை விலங்கிட்டு, ஊர்வலமாக இழுத்துவர அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இப்படிச் சொல்வது வழக்கு மன்றங்களையே அவமதிப்பதாக இருக்கும். முறையாக நடைபெறுவதாகத் தான் எடுத்துக்கொள்ள வேண்டும்.

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, விவசாயிகளிடம் அரசாங்கம் கொள்முதல் செய்தபிறகு, சர்ப்ளஸ் ஆக இருக்கும் நெல்லை அவர்கள் விற்கின்றபோது, அவர்களுக்கு எதிராக இந்தச் சட்டத்தை உபயோகிக்காமல் இருப்பதற்கு உத்தரவாதம் அமைச்சர் கொடுப்பார்களா ?

**மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் :** அப்படி எதிராக உபயோகித்ததாக எந்த விதமான புகாரும் அரசாங்கத்திற்கு வரவில்லை.

**திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, முன்பு கள்ள மார்க்கெட் கழுகுகளைத் தூக்கில் இடவேண்டும் என்று காலஞ்சென்ற பண்டித நேரு அவர்கள் சொன்னார்கள். இப்பொழுது தூக்கில் இடாவிட்டாலும் கள்ள மார்க்கெட்காரர்களுக்குக் கடும் சிறைத் தண்டனையாவது கொடுக்க சர்க்கார் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ஏற்கனவே சொன்னேன். சிறைத் தண்டனையே கொடுக்க வேண்டும் என்று. அப்படிச் செய்பவர்களுடைய தானியங்களைப் பறிமுதல் செய்வதோடு, அதற்கு உபயோகிக்கும் லாரிகளையும், இதர வாகனங்களையும்கூடப் பறிமுதல் செய்ய வேண்டும், சிறைத் தண்டனை கொடுக்க வேண்டும் என்ற முறையில் சட்ட முறை இருக்க வேண்டும் என்று ஆலோசிக்கப்பட்டு வருகிறது. அதோடு, வேறு சொத்து வைத்திருப்பவர்களாக இருந்தால், அந்தச் சொத்து முழுவதும் பறிமுதல் செய்ய வேண்டும் (ஆரவாரம்) என்று மத்திய சர்க்காருக்கு, அப்படி அவர்கள் கொண்டுவர வேண்டும் என்று இந்தச் சர்க்கார் வற்புறுத்திக்கொண்டு வருகிறது. (பலத்த ஆரவாரம்).

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், மாவட்டக் கலெக்டர்களுக்கு உத்தரவு போடும்போது, வட ஆர்க்காடு மாவட்டத்தில் டெபிசிட் தாலுக்காக்களான குடியாத்தம், வேலூர் தாலுக்காக்களைப் பொறுத்தவரையில், இப்பொழுதும் இரண்டு ரூபாய்க்குமேல் படி அரிசி விற்கப்படுகிறது என்பதை மனதில்கொண்டு, ரூபாய்க்கு ஒரு படி அரிசி என்கிற திட்டத்தை அங்கே அமல் நடத்த வேண்டும் என்று செய்ய உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அப்படி அமல் நடத்த செயற்குறிப்பு இல்லை. ஆனால், முதல் கட்டமாக இரண்டு மாதங்களுக்குள்ளே சென்னையின் புறப் பாகங்களாகிய, திருவொற்றியூர், தாம்பரம், ஆவடி போன்ற இடங்களுக்கு அமல் படுத்தப்படும். அதன்பிறகு குடும்பக் கார்டுகள் உள்ள இடங்களில் செய்யப்படும்.

### பதுக்கல் அரிசி கண்டுபிடிப்பு

* 332வினா—**திரு வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய உணவு—வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா ?

பதுக்கி வைத்துள்ள அரிசியைக் கண்டுபிடிக்க போலீஸ் நாய்களை உபயோகப்படுத்தும் உத்தேசமுண்டா ?

**மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் :** இல்லை.

1967 ஜூலை 14]

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், பல பிரச்சினைகளுக்கு இந்த நாய்களை உபயோகிக்கும்போது, அரிசி மூட்டைகளைக் கண்டுபிடிக்க இவற்றை உபயோகிக்கவே உத்தேசம் இல்லையா அல்லது உபயோகித்து பலன் இல்லையா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** உத்தேசம் இல்லை என்பதில்லை. இந்த மாதிரிப் போலீஸ் துப்பறியும் நாய்களுக்குப் பிரத்தியேகமாக, குற்றங்களைக் கண்டுபிடிக்க பயிற்சி அளிக்கப்படுகிறது. கொலைக் குற்றம், திருட்டுகள், போன்றவற்றைக் கண்டுபிடிக்க, கொலைகாரன் யார், திருடன் யார் என்று கண்டுபிடிக்க, அந்த இடத்திலே, வாசனை மூலமாக, கிடைக்கும் பொருள்களைக்கொண்டு குற்றவாளிகள் எங்கே இருக்கிறார்கள் என்று கண்டுபிடிக்கின்றன. அது ஒரு அம்சம். இரண்டாவது அம்சம் குற்றம் நடந்தவுடனே போலீஸ் நாய்கள் துப்பறியப் போக வேண்டும்; அந்த இடத்திற்கு அவசர, அவசரமாகக் காலதாமதம் இல்லாமல் நாய்கள் அனுப்பப்பட வேண்டும். கொலைக் குற்றம், திருட்டுக் குற்றம் போன்றில்லாமல், பதுக்கல் என்பது ஒரு பிரத்தியேகக் கலையாக இருக்கிறது. அதோடு பதுக்கலில் நாய்களை உடனடியாக அனுப்புவது என்பது சாத்தியமில்லை. ஆகவே, நாய்களை ஊக்குவிக்கும் உத்தேசம் அரசாங்கத்திற்கு இல்லை.

**Thiru K. Vinayakam :** Sir, is the Hon. Minister aware of the fact that however much the police dogs may be efficient, they can only distinguish between a murde er and a non-murrderer by smelling clothes or blood-stains and it is not possible for any dog even if it trained by the police officials to distingnish between hoarded rice and ordinary rice which is licensed under the trade ?

**The Hon. Thiru K.A. Mathialagan ;** Sir, I have already answered it.

**திரு. கரு. சீமைச்சாமி :** அரிசிக் கடத்தலுக்கு, போலீஸ் நாய்களை அனுப்புவதானால், திரு கோதண்டராமன், அவர்கள் வீட்டிற்கு அனுப்பினால் அது அங்கே படுத்துவிடும் என்பது அமைச்சருக்குத் தெரியுமா ?

(பதில் இல்லை).

**திரு. மு. ச. சிவசாமி :** தலைவர் அவர்களே, தூத்துக்குடியில் உணவுப் பதுக்கலைப் பற்றி ரெவின்யூ பிரிவிலும், போலீஸ் பிரிவிலும் தெரிவிக்கப்பட்டும், எந்த விதமான நடவடிக்கை எடுப்பதற்கும் பதிலாக, பதுக்கல்காரர்களுக்குச் சாதகமாகவே நடக்கிறார்களே அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** This is a question about the Police Dog. ஆகவே போலீஸ் நாயைப்பற்றிக் கேள்வியை மாற்றிப் போடக் கேட்டுக்கொள்ளுகிறேன்,

**திரு. மு. ச. சிவசாமி :** அரசியல் வாதிகள் துப்புச் சொன்னாலும், ரெவின்யூ பிரிவும், போலீஸ் பிரிவும் நடவடிக்கை எடுக்காததால், துப்புத் துலக்க இந்த நாய்களை அனுப்புவார்களா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** கனம் உறுப்பினர் யாரிடத்தில் துப்புச் சொன்னார்கள் என்று தெரிய வேண்டும். இதற்காகவே 'என்போர்ஸ்மெண்ட் ஸெல்' என்று நிறுவி, ஏற்கனவே டெபுடி இன்ஸ்பெக்டர் ஜெனரல் கீழே நடைபெறும் 'ஆண்டி-ஸ்மகலிங் ஸெல்' உடன் புதிதாக வர்த்தக இலாகா, கள்ளச் சந்தை, இவற்றைக் கண்காணிக்க ஒருங்கே இயங்கும் வகையில் செய்யப்பட்டிருக்கிறது. அவர்கள் சொல்லும் துப்பு யாரிடம் சொன்னார்கள் என்று தெரியவில்லை. எங்கே பதுக்கல் இருக்கிறது, எவ்வளவு இருக்கிறது என்பதைப் பற்றி இப்போதாவது சொன்னால் துரிதமாக நடவடிக்கை எடுக்க உதவியாக இருக்கும்.